மட்டக்களப்பு மாநகர சபை – 2017
மட்டக்களப்பு
--------------------------------------------

1. நிதிக்கூற்றுக்கள்
--------------------

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்
--------------------------------------

2017 ஆடிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 23 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 13 இல் சபையின் மாநகர முதல்வர் மற்றும் உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம;
------------------------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மட்டக்களப்பு மாநகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள;
-------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்
--------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் கொண்டுவரப்பட்ட களஞ்சிய இருப்பின் பெறுமதி ரூபா 52,402,332 பொருள் மெய்மையாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக களஞ்சிய இருப்பின் உண்மைத் தன்மையை அறியமுடியாதுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைக்கப்பெற்ற மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 15,410 நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது யுனொப்(UNOPS) நிறுவனத்திடமிருந்து நன்கொடையாக கிடைத்திருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மற்றும் மடிக்கணினி ஒன்று என்பவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தொங்கல் கணக்கு
------------------------

2017ம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் தொங்கல் கணக்கு வரவு மீதியாக காணப்பட்ட ரூபா 714,185 I இனங்கண்டு கணக்குகளை சீராக்கம் செய்வதற்கு பதிலாக திரண்ட நிதியுடன் சீராக்கப்பட்டிருந்தது.

1.3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை.

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் (நி.பி) | |
| (i) நி.பி இல. 134(2) | மீளாய்வாண்டிற்கான நிதி விடயங்கள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு பரிசோதனை நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. |
| (ii) நி.பி இல. 571 | 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நானாவித வைப்புக்களின் மீதி ரூபா 1,092,730 தொகையாக காணப்பட்டிருந்தும் அவற்றை கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நி.பி இல. 756 | நூலகப் புத்தகங்கள் கணிப்பு சபை ஒன்றினால் பல வருடங்களாக கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நி.பி.இல.1645 மற்றும் 1646 | வாகனங்களுக்குரிய ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்த மூலப் பொழிப்புக்கள் ஒவ்வொரு மாதமும் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் பயன்படுத்தப்படும் வாகனங்களின் ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்த மூலப் பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>சபையினால் வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் நுகர்வு பரிசோதனையொன்று ஒவ்வொரு வருடத்திலும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1990 ஒக்டோபர் 10ம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | |

2 நிதி மீளாய்வு
----------------

2.1 நிதி விளைவுகள்
--------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 74,268,918 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 105,689,284 ஆக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா 31,420,366 வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

2.2 நிதிக் கட்டுப்பாடு
---------------------

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் உப கட்டுநிதி அது வழங்கப்பட்ட செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாகவே தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 2013, 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் 05 சந்தர்ப்பங்களின் போது பல்வேறு நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 607,972 தொகையான முற்பணக் கட்டுநிதியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3 வருமான முகாமைத்துவம்
-------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வீத வரிகள்
----------------

சபையினால் ஆதனவரியாக 2008 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 25,469,851 தொகை அறவிடப்பட வேண்டிய தொகையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசத்துக்கான வரிகள், தர்மஸ்தாபனத்திற்கான வரிகள், அரசினால் சுவிகரிக்கப்பட்ட பிரதேசத்திற்கான வரி, இரட்டைப் பதிவுகள் மற்றும் மாநகர சபையின் சொத்துக்கள் போன்றவற்றிற்கான வரி நிலுவைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) வாடகை அறவீடு
---------------------

2016 ஆம் ஆண்டு ரூபா 10,190,688 வாடகை மற்றும் அதனோடிணைந்த வருமானம் அறவிட வேண்டியிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டு இவ் அறவிட வேண்டிய வருமானம் ரூபா 16,359,604 ஆக அதிகரித்திருப்பது வருமான அறவீட்டில் ஒரு பின்னடைவைக் காட்டுகின்றது.

3 செயற்பாட்டு மீளாய்வு
---------------------------

3.1 செயலாற்றல் மீளாய்வு
----------------------------

(அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு
------------------------------------------

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து

கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முடிவுறாத வேலை

------------------------

ரூபா 227 மில்லியன் மதிப்பீட்டுத் தொகையில் ஆரம்பிக்கப்பட்ட பொது நூலக கட்டிடம் ஒன்றின் கட்டிட வேலைகளுக்காக 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரை ரூபா 74,752,383 செலவிடப்பட்டிருந்தும் இக் கட்டிடம் இடை நடுவில் கைவிடப்பட்டிருந்ததுடன் இக் கட்டிடத்தை கட்டி முடிப்பதற்கான நடவடிக்கை எதுவும் சபையினால் மீளாய்வாண்டின் இறுதி வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு கட்டிடம் நான்கு அல்லது ஐந்து வருடங்களில் கட்டி முடிக்காமல் போனால் கட்டிடத்தின் ஸ்திரமான தன்மை அற்றுப் போகக் கூடிய வாய்ப்பும் உள்ளது.

(இ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

-----------------------------------

திருப்பெருந்துறை திண்ம கழிவுகளை புதைக்குமிடமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அக்காணி சட்டரீதியாக பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதியின்றி திருப்பெருந்துறையில் மலசல கழிவு கொட்டப்படுவதால் வெளிவரும் கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யப்படாமல் சுற்றாடலுக்கு விடப்படுவது அவதானிக்கப்பட்டது.

(ஈ) தாய் சேய் நலன் மற்றும் சௌபாக்கியம் பேணல்

------------------------------------------------------------

2017 ஆம் ஆண்டில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மட்டக்களப்பின், சபையின் எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் பிறந்த 1,290 பிள்ளைகளில் 137(10.6%) பிள்ளைகள் நிறை குறைந்த பிள்ளைகளாக பிறந்திருந்தது. ஆனால் சபையினால் வரவு செலவு திட்டத்தில் ரூபா 250,000 மகப்பேற்று குழந்தை நலனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும், சபையினால் மேற் குறித்த திட்டத்திற்கு செலவு செய்யப்படவில்லை. என்பதோடு 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே 109, 136 மற்றும் 98 நிறைகுறைந்த பிள்ளைகள் பிறந்திருந்தும், சபையினால் வரவு செலவு திட்டத்தில் மேற்படி விடயத்திற்காக நிதி ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை

(உ) பயணிகள் போக்குவரத்து தரிப்பிடம்

-------------------------------------------

சபையின் எல்லைக்குட்பட்ட திருகோணமலை மட்டக்களப்பு A15 வீதியில் 7Km இடைப்பட்ட, கல்லடி மற்றும் விபுலானந்தா இசை நடனக் கல்லூரி போன்ற இடங்களில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பயணிகள் பேருந்திற்காக தரித்து நிற்கக்கூடிய இடமாக சுட்டிக்காட்டப்பட்ட இடத்திற்கு நேராக பேருந்திற்காக மக்கள் தரித்து நிற்கும் நிலையம் சபையினால் அமைக்கப்படாமல் சுமார் 6m தொலைவில் தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டிருப்பதால் மக்கள் மற்றும் பேருந்து ஓட்டுனர்களும் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

-----------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டுவரை பதவி வறிதாக்கப்பட்ட 05 ஊழியர்களின் மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற 08 ஊழியர்களின் கடன் நிலுவைகள் முறையே ரூபா 265,678 மற்றும் ரூபா 337,251 தொகையை அவர்களிடமிருந்து

அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாநகர விடுதிகளைத் திருத்துதல்

சபையின் 03 விடுதிகள் சிறு சிறு திருத்தங்கள் காணப்பட்ட போதும் அவற்றை திருத்த நடவடிக்கை எடுக்காமல் முறையே 2015 மார்ச், 2017 பெப்ரவரி மற்றும் 2017 மார்ச் காலப்பகுதியிலிருந்து எவருக்கும் கையளிக்கப்படாது பயன்பாடற்று காணப்படுவதோடு 03 விடுதிகளையும் வாடகைக்கு விடாததால் சபையினால் பெறக்கூடிய வருமானத்தை சபை இழந்து வந்துள்ளது. மேலும் திருத்தம் செய்து பாவனைக்கு பயன்படுத்தப்படாததால் கவனிப்பற்றுக் கிடக்கும் இடங்களில் நுளம்புளின் பெருக்கம் அதிகமாகக் காணப்படுவதால் சபையானது மறைமுகமாக நுளம்புகள் பெருக்கத்திற்கும் துணை போகக்கூடிய வாய்ப்பும் உள்ளது.

(இ) கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் திருப்பெருந்துறையில் Night soil treatment plant புனரமைப்பு வேலை முடிவுற்றதென அறிக்கை தயாரித்து 2015 டிசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 1,000,000 பெறப்பட்டிருந்த போதிலும் ரூபா 320,000 க்கு வேலைக்கான இரும்பு கேற், மின்சார இணைப்பு மற்றும் நீர் வழங்கல் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2015ம் ஆண்டு வரை செய்து முடிக்கப்பட்ட வேலைகளுக்கான பிடிகாசு தொகை ரூபா 3,060,985 ஒப்பந்தகாரர்களுக்கு மீள வழங்குவதற்கோ அல்லது சபை வருமான கணக்குக்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாமல் வைப்பு கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

(உ) வாகன தரிப்பிடம் குத்தகைக்கு விடல்

சபையினால் 2017 ஜனவரி 01 ஆம் திகதி மத்தியாஸ் வீதியில் மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு வரி அறவிடுதலுக்காக ரூபா 1,910,999 குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகை ஒப்பந்தத்தின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் மத்தியாஸ் வீதி தவிர ஏனைய வீதிகளில் வாகனங்கள் தரிக்கப்படுவதும், வரி வசூலிப்பதும் முற்றிலும் தடை செய்யப்பட்டிருந்தும், 2017 ஐப்பசி 06 ஆம் திகதிய கள ஆய்வின் போதும் மற்றும் இன்றுவரைக்கும் இதற்கு முரணாக வேறு வீதிகளிலும் நிறுத்தப்பட்ட வண்டிகளுக்கும் வரி வசூலிக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது.

(ஊ) சபைக்கு சொந்தமான காணி கட்டிடங்களின் பெறுமதி இன்று வரை மதிப்பீடு செய்யப்பட்டு அவை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக சபையின் பெறுமதியான காணி கட்டிடங்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடும் போது வருமானத்தின் அளவினை சரியாக மதிப்பிட முடியாதிருப்பதனால் வருடாந்த வருமானத்தினையும் அதிகரித்து அறவிட முடியாதிருக்கின்றது.

3.3 சொத்து முகாமைத்துவம்

3.3.1 சொத்து கணிப்பீட்டு அறிக்கை

மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததன் பிரகாரம் அகற்றப்பட வேண்டிய பொருட்களுக்கு ஏற்ற நடவடிக்கை எடுப்பதற்காக குழு அமைக்கப்பட்டு அகற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.4 ஒப்பந்த நிர்வாகம்

3.4.1 இரவு நேர சந்தை அமைத்தல்

மாநகர சபையினால் நெல்சிப் திட்டத்தின் கீழ் இரவு நேர சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டு வரை மொத்தமாக ரூபா 30,950,689 பெறுமதியில் சந்தைக் கட்டிடம் அமைக்கப்பட்டிருந்தும் இன்று வரை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.4.2 நிருமாணம் மற்றும் பராமரிப்பு வேலைகள் மீதான கட்டுப்பாடுகள்

மீளாய்வாண்டில் சபைநிதி மற்றும் மானியங்கள் மூலம் சபையினால் வேலைத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு வேலைகளுக்கும் வேலைத்தாள்கள் (Job Sheet) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. என்பதோடு குறிப்பிட்ட ஒவ்வொரு வேலைகளுக்காக வழங்கப்பட்ட மூலப்பொருள்கள் மற்றும் ஏனைய செலவுகள் குறித்த வேலைகளின் மீது சாட்டுதல் செய்யப்பட்டிருக்கவில்லை.

4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக்கட்டுப்பாடு

மூலதன மற்றும் நடைமுறைச் செலவிற்காக பாதீடு செய்யப்பட்ட தொகைக்கும் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 15% தொடக்கம் 64% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டுள்ளமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

5 முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) வருமானமுகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| (ஆ) பாதீடு தயாரித்தல் | பாதீடு தயாரிக்கப்படும் போது உரிய விடயங்கள் பகுப்பாய்வு செய்தல் மற்றும் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும் |
| (இ) கணக்கீடு | பேரேடுகள் நாளாந்தம் முறையாக பேணப்படுதல் வேண்டும். |
| (ஈ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும்.<br>(ii) சபையில் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் நிலையான சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) களஞ்சியம் | களஞ்சிய இருப்பின் பெறுமதியானது உண்மையாக உள்ள சொத்துக்களின் பெறுமதியினை கணிப்பிட்டு அதன் பெறுமதியை நிதிக்கூற்றில் தெரியப்படுத்துதல் வேண்டும். |